## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai

CC.NO.100/2023

Deposition of LW2 examined as PW1 Date: 22.08.25

| | |
|---|---|
| Name | பாரதிதாசன் |
| Father's/Husband's Name | திருநாவுக்கரசு |
| Village | தஞ்சாவூர் |
| Taluk | |
| Age | 37/2025 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 22.08.25**

(Accused present.)

**முதல் விசாரணை**

நான் தற்போது பட்டுக்கோட்டை வனச் சரக அலுவலகத்தில் ஆவணம் பீட் வனக்காப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 மற்றும் 2023 ம் ஆண்டு சீர்காழி வனச்சரக அலுவலகத்தில் மங்கைநல்லூர் பீட் வன காப்பாளராக பணிபுரிந்தேன். கடந்த 22.03.2023 ம் தேதி சுமார் காலை 10.00 மணி அளவில் சீர்காழி வனச்சரகம் மயிலாடுதுறை பிரிவு மங்கைநல்லூர் பீட்டிற்கு உட்பட்ட எழுமகளூர் கிராமத்தில் வனச்சரக அலுவலர்க்கு கிடைத்த ரகசிய தகவலின் படி எதிரி ஜெயசீலன் என்பருடைய விவசாய நிலத்தில் 3 பெண் மயில்கள் இறந்த நிலையில் கிடந்தது. இது சம்பந்தமாக மயிலாடுதுறை வனவர் கதாநாயகன் மற்றும் நானும் என்னுடன் பணிபுரியும் வனக்காவலர் கலைவாணன் ஆகியோர் அடங்கிள குழு காலை 11.00 மணிஅளவில் மேற்படி எதிரி ஜெயசீலன் என்பவருடைய விவசாய நிலத்திற்கு சென்றோம் .அங்கு 3 பெண் மயில்களும் இறந்து கிடந்தன. விவசாய நிலத்தின் பல்வேறு இடங்களில் மருந்து தடவிய அரிசியும், குருணையும் ஆங்காங்கே சுமார் 20 இடங்களில் வைக்கப்பட்டிருந்தன, இது சம்பந்தமாக இந்தநிலம் யாருடையது என்று அந்த ஊர் கிராம நிர்வாக அலுவலரிடம் விசாரணை செய்தபோது அவர் எதிரி ஜெயசீலனின் இடம் தான் என்றும் அவரது வயலில் 3 பெண் மயில்களும் இறந்து கிடந்தது உண்மைதான் என்று சான்று கொடுத்தார். பிறகு எதிரி ஜெயசீலன் என்பவரை நானும், வனவரும் விசாரணை செய்தோம். அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எங்கள் வயலில் உள்ள உழுந்து பயிர்களை எலிகள் சேதப்படுத்தியதால் அவைகளை கொல்வதற்காக விஷம் தடவிய அரிசியை, குருணையையும் வயலில் சுமார் 20 இடங்களில் வைத்ததாக கூறினார். அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை வனவர் முன்னிலையில் நான் பதிவு செய்தேன். **(ஒப்புதல் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியிடு செய்யப்படுகிறது. )** . மேலும், கிராம நிர்வாக அலுவலர் முன்னிலையில் இறந்து கிடந்த 3 பெண் மயில்களையும் விஷம் கலந்த அரிசி மற்றும் குருனையையும் கைப்பற்றுதல் மகசர் வாயிலாக கைப்பற்றினார். பின்னர், H நமுனா நான் தயார் செய்து கைப்பற்றப்பட்ட பொருட்களையும், எதிரியையும் சீர்காழி வன சரகர் அலுவலகத்திற்கு கொண்டு சென்றோம். பிறகு, வன சரகர் அலுவலர் எதிரியை மீண்டும் விசாரணை செய்தார். எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பெயரில் வன சரகர் அலுவலர் உத்தரவின் படியும் நான் என்னுடைய வன காப்பாளர் புத்தகத்தில் வழக்கு பதிவு செய்தேன். கைது செய்த எதிரியை தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். கைப்பற்றப்பட்ட மயிலையும், அந்த தடய பொருட்களையும் படிவம் 91 ன் மூலமாக நீதிமன்றம் வசம்

ஒப்படைத்தேன். (**H நமுனா மற்றும் படிவம் 91 அ.சா.ஆ.2 மற்றும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) பின்னர், இந்நீதிமன்றத்திற்கு 3 பெண் மயில்களையும் பிரேத சுவராய்வு செய்தவற்கான வேண்டுகோள் கடிதத்தினை கொடுத்தும், இந்நீதிமன்ற உத்தரவின் படி நக்கம்பாடி, குத்தாலம் தாலுக்கா கால்நடை உதவி அறுவை சிகிச்சை மருத்துவரிடம் 3 பெண் மயில்களையும் ஒப்படைத்து உடற்கூராய்வு செய்யும்போது உடனிருந்து அந்த மயில்களின் உடல் பாகங்களை மருத்துவரின் அறுவுறுத்தலின் படி சீல் இடப்பட்ட அட்டை பெட்டியினை பெற்று அதனை தஞ்சாவூர் மண்டல தடய அறிவியல் ஆய்வகத்தில் நான் 23.03.2023ம் தேதியன்று சமர்ப்பித்தேன். அந்த ஆய்வகத்திலிருந்து அறிக்கையானது 06.04.2023ம் தேதியன்று கால்நடை மருத்துவருக்கு ஒன்றும், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி வன சரக அலுவலகத்திற்கு ஒன்றும் வந்தது. அந்த அறிக்கையில் 3 பெண் மயில்களும் ஆர்கானிக் பாஸ்பரஸ் என்ற பூச்சிக்கொல்லியால் இறந்ததாக அறிக்கை அளிக்கப்பட்டது. (**அந்த அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) நான் அந்த அறிக்கையினை இந்நீதிமன்றத்தில் சமர்ப்பித்தேன்.

**குறுக்கு விசாரணை இல்லை**

(

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிர் பின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது

22/8/25

நீதித் துறை நடுவர் எண். I
மயிலாடுதுறை.